# புதுயுகம்

**மதுரை சீடு அறக்கட்டளை வெளியீடு**

**மாணவர் தனிச்சுற்று மாத இதழ்**

**நன்கொடை ரூ.2**

**மலருகின்ற உலகை நற்பணிகளால் காப்போம்**

உலகு 1 மார்ச் 2007 பணி மடல்: 1






15 வயது முதல்
18 வயது நிரம்பிய
மாணவர்களால்
நடத்தப்படும்
தனிச்சுற்று
இதழ்

# புதுயுகம்

மதுரை சீடு அறக்கட்டளை வெளியீடு

மாணவர் தனிச்சுற்று மாத இதழ்

மலருகின்ற உலகை நற்பணிகளால் காப்போம்

உலகு 1 | மார்ச் 2007 | பணிமடல்: 1

*Publishers*
Mr. A.S.KarthikBharathi
9894805446
Mr. K.P.Anbarasan
9894918130

*Honorary Editor*
Mr. S.Muthukumar
98438 79066

*Editor*
Mr. C.T.Premkumar
9944101615

*Editorial Board*
S.I.Patel, 936024536
C.T.Arunkumar, 9894805446
C.K.Karbagajothi, 9865017643
M.S.Thangalakshmi, 9360834912

*Communication Address*
PUDHUYUGAM - MONTHLY
C/o. C.T.Premkumar
SEED TRUST
Arjun Shanmuga Illam
439/1, East Street,
Karumbalai,
Madurai-20.
Ph: 0452 - 6456503
askb_seednarpanigal_2000@yahoo.com

நண்பர்களே!

நெருங்கி வரும் தேர்வுச்சூழலில் மாணவர்களின் படைப்புக்களைத் தாங்கி பதற்றமின்றி புதுயுகம் இதழ் வெளிவந்து, தங்களின் சிந்தனைக்கு விருந்தாகி இருக்கின்றது. இளம் மூளைகளின் குரலாக, தேசம் விரும்பும் இளைஞர்களின் செயல்பாடாக புதுயுகம் முழுக்க முழுக்க மாணவர்கள் பங்கேற்பில் உருவானதாகும். மாதந்தோறும் எங்களின் முயற்சியில் புதுப்பொலிவோடு புதிய புதிய செய்திகளைத் தாங்கி புதுயுகம் வெளிவரும். நண்பர்களே வாருங்கள். தினம் தினம் புதுப்பித்துக்கொண்டு உலகத்தை நம் எண்ணங்கள் கொண்டு நல் செயல்பாடுகளோடு காத்து வரலாறாவோம்.

C.T.பிரேம்குமார்
ஆசிரியர் குழு

அச்சிட்டோர்:-

ஸ்ரீ முத்தன் பிரிண்டர்ஸ்,
13, E2, E2 ரோடு, C.S.I. சர்ச் பின்புறம்,
மதுரை - 625 002.
போன்: 3256908, 9865935571

அன்பு மாணவ நெஞ்சங்களே!

நம்மை தரமாக்கிக் கொள்ள, நம் சிந்தனைகளை சிறப்பாக்க, நம் வாசிப்பை உன்னதமாக்க, நமக்கு நாமே சிருஷ்டிக்கும் உலகமாக புதுயுகம் படைக்க புறப்பட்டிருக்கின்றோம். நம் இதயங்கள் கற்பனைகளையும் கனவுகளையும் பெருக்கட்டும். அவற்றை ஏடுகளில் கவிதைச் சுவடுகளாய் பதிப்போம். நம் பார்வைகளும், வாழ்வியல் முறைகளும் வசந்தப் பூக்களாய் மற்றவர்க்கு மணம் வழங்கட்டும். நெஞ்சங்களே, வாசிப்பு உள்ளங்களே எங்களுக்கு ஆசிகளும், வாழ்த்துக்களும் தாருங்கள். மதுரை சமூக மற்றும் பொருளாதார சூழல்களால் நலிவுற்ற பகுதிகளில் வாழும் மாணவர்களின் முழு பங்கேற்பில் உருவாகி வெளிவரும் புதுயுகம் சாதனை சிகரங்களை தொடும் வாழ்த்துக்கள்.

நன்றி.

15.02.2007
மதுரை.


சீடு நற்பணிகளில்
**அ.ச.கார்த்திக்பாரதி**

## சீடு களப்பணியாளர்கள்




K.L.கணேஸ்பாபு
P.L.மணிகண்டன்
M.M.சுந்தர்ராஜன்
M.T.மாரிமுத்து
C.T..பிரேம்குமார்
O.G.மோகன்
M.S.தங்கவேலாயுதம்
R.A.பாஸ்கர் ராஜா

## நட்பு



ரோஜாப்பூ வாடும்
மல்லிகைப்பூ வாடும்
முல்லைப்பூ வாடும்
தாழம்பூ வாடும்
ஆனால் என்றும் வாடாத பூ
நம் சிரிப்பு
உன் அன்பு
என் நட்பு



சூர்யா, அருண், மணி
5-ஆம் வகுப்பு
கரும்பாலை.


## மழை

வெள்ளிக்கம்பிபோல மின்னி மின்னி என் ஊர் செழிக்க
பெய்யும் மழையே
உயிர்செழிக்க காடு செழிக்க
பெய்யும் ம்ழையே நீ
தினமும் வா மழையே.



S.முத்துகணேஷ்
5ஆம் வகுப்பு, இந்திராநகர்.

# விளையாடு மகிழ...



## பொட்டு வைத்த முகமோ



போட்டியாளர் எண்ணிக்கை : விருப்பத்திற்கேற்ப

வயது : 8 - 9

நேரம் : விருப்பத்திற்கேற்ப


தேவையான பொருட்கள் : ஒட்டும் பொட்டுகள் (தேவையான அளவு)

விளையாடும் முறை :-

போட்டியாளர்களை இரண்டு இரண்டு பேராக பிரிக்க வேண்டும். போட்டியாளர்களை எதிரெதிரே உட்கார வைத்து ஒட்டும் பொட்டுகளை அவர் முன்னே சம அளவு போட வேண்டும். போட்டி ஆரம்பித்தவுடன் பொட்டுகளை ஒன்று ஒன்றாக எடுத்து தனக்கு எதிரே உள்ள கூட்டாளியின் முகத்தில் ஒட்ட வேண்டும். குறிப்பிட்ட நேரத்திற்குள் அதிக எண்ணிக்கையில் பொட்டுகளை ஒட்டுபவரே வெற்றி பெற்றவராவார்.

நன்றி விடியல் - கலகலப்பு தொகுப்பு

## பாடி மகிழ்க



### பெயர் அறிந்து...

ஒரு கொடிய தூக்க தூக்க ஓராயிரம் பாகற்காய்
ஓராயிரம் பாகற்காய்

யாரு திங்கிற பாகற்காய் யாரு திங்கிற பாகற்காய்

Seed திங்கிற பாகற்காய்


கசக்குமா புளிக்குமோ கலந்து கொட்டடி சர்க்கரையை

யாரு திங்கிற பாகற்காய்

Seed திங்கிற பாகற்காய்

பறிக்க பத்தலை பொறிக்க பத்தலை

Seed திங்கற பாகற்காய்



(Seed என்ற பெயர்வரும்போது வாண்டுகள் தங்கள் பெயரையோ.
பிற வாண்டுகளின் பெயரையோ மாறி மாறி
கூறி விளையாடலாம்.இது பெருங்கூட்டத்திற்கான
பெயர் அறிமுக பாடல்)

M.S.தங்கவேலாயுதம் B.A.
புதுவை & ஆரோவில் பகுதிகளில் கிடைத்த பாடல்.



# பாடி மகிழ்க

## காந்தித் தாத்தா போல நாம் நடந்திடுவோம் பாரு...

காந்தி தாத்தா பாரு - அவர்
கண்ணாடி போட்டிருப்பாரு
கையில் பெரிய தடியே காணோம் தலையில் முடியே
உயரமான உருவம் -அவர்
ஒட்டப்பல்லு பருவம்
அழகான மீசை - அதை
பார்க்க பார்க்க ஆசை
பனியன் இல்லா தாத்தா
அவர் பாதி வேட்டி தாத்தா
காந்தி தாத்தா மனைவி
கஸ்தூரி நல்ல துணைவி
பூந்தி இனிப்பு போல
ரொம்ப பொருத்தமான ஜோடி
புலால் உண்ணமாட்டார் - அவர்
பொய்யே பேச மாட்டார்
வைய்யும் போது சிரிப்பார் - அவர்
வாழ்த்து சொல்லி குதிப்பார்
காந்தி தாத்தா பாரு - அவர்
கண்ணாடி போட்டிருப்பாரு
கையில் பெரிய தடியே காணோம் தலையில் முடியே
காந்தி தாத்தா போல நாம் நடந்திடுவோம் பாரு




கார்த்திகபாரதி நடத்திய cesci அமைதிமுகாம்*
பாண்டிச்சேரி சக்தி - சரஸ்வதி கற்றுத்தந்த பாடல்

# பாடி மகிழ்க



## Row, Row, Row

*Row, row, row your boat*
*Gently down the stream*
*Merrily merrily merrily merrily*
*Life is but a dream.*




(CHUCK-ANN Seed குழந்தைகளுக்கு கற்றுத்தந்த பாடல்)

## Oh! Rum! Pam! Pam

*Oh! Rum! Pam! Pam!*
*Oh! Rum! Pam! Pam!*
*Oh! Gooly! Gooly! Gooly! Gooly!*
*Rum! Pam! Pam!*
*Oleyo! Oleyo*
*Oh! Gooly! Gooly! Gooly! Gooly*
*Rum! Pam! Pam!.*



(விடியலின் அதிர்வொலிகள் தொகுப்பு புத்தகம்)



# கதை சொல்லப் போறேன்
# விடுகதை சொல்லப் போறேன்..

1) கசப்பாய் இருக்கும் விஷமும் அல்ல
உடம்பு எல்லாம் முள்ளாய் இருக்கும்
முள்ளம் பன்றியும் அல்ல, ஆனால்
சத்தாக இருக்கும் அது என்ன?

2) பூமியில் உள்ள சொத்து
எண்ண முடியாத முத்து
அது என்ன?



3) கட கட குடு குடு
நடுவுல பள்ளம்
அது என்ன?

4) இதன் மரமும் பயன்
இலையும் பயன்
பூவும் பயன்
காயும் கூட பயன்
ஆனால், பழம் மட்டும் பயனில்லை
அது என்ன?

விடைகள்
1) பாகற்காய்
2) மண்
3) உரல்
4) முருங்கை

வனிதா ஸ்ரீ
எட்டாம் வகுப்பு. கரும்பாலை.

# பொறாமை வேண்டாம்




பூம்பட்டினம் என்ற ஒரு கிராமத்தில் ஒரு குடும்பம் வசித்து வந்தது. அக்குடும்பத்தில் அம்மா, அப்பா, மகன் ஆகிய மூவர் வாழ்ந்து வந்தனர்.அம்மா பெயர் காமாட்சி, அப்பா பெயர் ராமசாமி, மகன் பெயர் கந்தன்.அப்பா விவசாயி. அப்பாவும், அம்மாவும் கந்தனை நன்கு கவனித்துக் கொண்டனர். கந்தனுக்கு ஐந்து வயது ஆகியது. அப்பொழுது கந்தனின் அம்மாவிற்கு ஒரு மகன் பிறந்தான். அவன் பெயர் முருகன். தாய், தந்தை இருவரும் கந்தன் பெரியவன் ஆகி விட்டான் என்று முருகனை நன்கு கவனித்துக் கொண்டனர். இது கந்தனுக்கு பிடிக்கவில்லை. கந்தனுக்கு வருத்தமாக இருந்தது. இவ்வாறே ஆறு ஆண்டுகள் கழிந்தன. கந்தனுக்கு வயது 15 ஆயிற்று. முருகன் அப்போது 10 வயதினானான். கந்தன் கெட்ட நண்பர்களின் கூட்டால் கெட்டவன் ஆனான். கந்தனின் வருத்தம் சிறிது சிறிதாக கோபமாக மாறியது. கந்தன் தன் பெற்றோரிடம் இருந்து முருகனை பிரிக்க திட்டமிட்டான். கந்தன் தன் அப்பாவின் சட்டைப்பையில் இருந்து பணத்தை எடுத்து பாதியை தான் வைத்துக்கொண்டு மீதியை முருகன் பையில் வைத்தான். அப்பா காலையில் தன் சட்டைப்பையில் பணம் இல்லாததை பார்த்து இருவரது பையிலும் தேடினார். கந்தன் தான் வைத்திருந்த பணத்தை இரவே செலவழித்துவிட்டான். பணம் முருகன் பையில் இருந்ததை பார்த்து அப்பா அதிர்ச்சியடைந்தார். பின்பு, அவர் முருகனை திட்டினார். அவ்வாறு தினம் தினம் திட்டி ஒருநாள் அடித்தே விட்டார். அதைப்பார்த்து கந்தன் மகிழ்ந்தான். மற்றொரு நாள் கந்தன் அப்பா சட்டையில் பணம் எடுக்கும்போது சில சில்லரைகள் சிதறின. அந்த சத்தத்தை கேட்டு அவன் அம்மா எழுந்துவிட்டாள். கந்தன் கையில் பணத்தைப் பார்த்த அம்மா, அப்பாவிடம் கூறிவிட்டாள். அப்பாவிற்கு உண்மை தெரிந்ததும் கந்தனை அடித்தார்.அதற்கு கந்தன் நான் கெட்டதற்கு காரணம் நீங்கள்தான். நான் பெரியவன் ஆகிவிட்டேன் என்று சிறியவனிடம் நீங்கள் அன்பு காட்டினீர்கள். அதுவே என் பொறாமைக்கு காரணமாய் அமைந்தது. பின்பு குழப்பம் தீர்ந்தது. அம்மா, அப்பா திருந்தினார்கள். கந்தனும் தான். பிறகு குடும்பம் செழித்தது.



சங்கீதா (VII)
தத்தனேரி.

## ஜோக்ஸ்



1) ராமு : வாழ்க்கைக்கும் வழுக்கைக்கும் என்ன வித்தியாசம்
சோமு : தெரியலடா
ராமு : வாழ்க்கை போர் அடிக்கும் வழுக்கை கிளார் அடிக்கும்

2) ஒருவர் : டாக்டர் ஓட்டலில் சாப்பிட்டேன் கை வலிக்குது என்றார்
டாக்டர் : ஓட்டலில் சாப்பிட்டால் வயிறுதானே வலிக்கும்
ஒருவர் : காசு கொடுக்காமல் சாப்பிட்டேன் மாவாட்ட சொல்லிட்டாங்க.

3) அமைச்சர் : புறாவிற்கு ரொம்ப பசி போல
அரசர் : எப்படி கூறுகிறாய்?
அமைச்சர் : கொண்டு வந்த ஓலையை அதுவே தின்றுவிட்டது.

4) ஒருவன் : எங்க வீட்டில விருந்தாளி வந்திருக்காங்க இலை வாங்க கடைக்குப் போறேன்.
மற்றொருவர்:உங்க வீட்டு விருந்தாளி இலையா சாப்பிடுவாங்க

5) 1 : மேலே படிக்கனுமுன்னு எனக்கு ரொம்ப ஆசையா இருக்குடா?
2 : சரி படிக்க வேண்டியது தானே
1 : ஆனால் எங்கள் வீட்டிலதான் மாடி இல்லையே.

தொகுப்பு
விவேக் VII
கரும்பாலை


## பெண்ணே! உன்னைப் பற்றி..



மலராய் பிறந்திருந்தால்
வண்ண மலராய் வாடாமல் மணம் வீசிப் பூத்திருப்பேன்
கனியாய் பிறந்திருந்தால்
ருசியாய், அழுகாமல் விதையாய் முளைத்திருப்பேன்
நீராய் பிறந்திருந்தால்
தீயவர்களுக்கு ஒளிந்து கொள்ள இடம் கொடுக்காமல் இருந்திருப்பேன்
தீயாய் பிறந்திருந்தால்
மருமகள்களையும், குடிசைகளையும் எரிக்காமல் இருப்பேன்
மலையாய் பிறந்திருந்தால்
தீயவர்களுக்கு ஒளிந்துகொள்ள இடம் கொடுக்காமல் இருப்பேன்
ஆனால், ஏனோ இறைவா...
என்னைப் பெண்ணாய் பிறக்கச் செய்தாய்
குழம்பினேன் முதலில்
தெளிந்தேன் பிறகு..
அத்தனையும் ஒரே பிறவியில் நிறைவேற்ற முடியும்
பெண்ணால் மட்டுமே.

- ராம்கிருஷ்ணன்
P.T. காலனி

# பொது அறிவு



✝ உலகிலேயே மிகப்பெரிய பீடபூமி எது?

✤ திபெத் பீடபூமி

✝ உல்கிலேயே உள்ள மிக நீளமான நதி எது?

✤ நைல், எகிப்து

✝ 2006 கால்பந்து போட்டியில் தங்க ஷீ வென்றவர்?

✤ மிரோஸ்லோவ் க்லோஸ்

✝ 2006 கால்பந்து போட்டியில் தங்க பந்து வென்றவர்?

✤ ஜினடின் ஜிடேன்

✝ ஒரு தினப் போட்டிகளில் அதிக விக்கெட் வீழ்த்தியவர்?

✤ வாசிம் அக்ரம், பாகிஸ்தான்

✝ கார் திருட்டு அதிகம் நடக்கும் நாடு எது?

✤ அமெரிக்கா

✝ ஒரு தின கிரிக்கெட் போட்டியில் நடப்பு சாம்பியன் அணி எது?

✤ மேற்கிந்திய தீவுகள்

✝ இலங்கை நாட்டின் ஜெயசூர்யா எத்தனை பந்துகளில் விரைவாக சதம் அடித்துள்ளார்?

✤ 17 பந்துகள்

✝ BC என்பதன் விரிவாக்கம் என்ன?

✤ Before Christ

✝ உலகிலேயே உள்ள மிகப்பெரிய ஏரி?

✤ காஸ்பியன்

தொகுப்பு :- S.திலீப்குமார், VII கரும்பாலை

வீட்டுக்குள் ஒரு பள்ளித் தேவை. பள்ளிக்குள் ஒரு வீடு தேவை. அதுவே இதயமுள்ள வீடு.

## கவிதை



நட்பு என்பது நடிப்பல்ல நாடித்துடிப்பு
உயிருள்ளவரை துடித்துக்கொண்டே இருக்கும்.

வானம் எனும் கல்லூரியில்
மேகம் எனும் வகுப்பறையில்
நாம் அனைவரும் நீர்த்திவலைகளாய் இருந்தோம்
இன்று நாம் அனைவரும் மழைத்துளியாய் சிதறினோம்.

பள்ளி எனும் மூன்று எழுத்தில் சென்று
கல்வி எனும் மூன்று எழுத்தை கற்று
நட்பு எனும் மூன்று எழுத்தில் இணைந்து
பிரிவு எனும் மூன்று எழுத்தில் பிரிந்தோம்.

M.முத்துப்பாண்டி (X)
கரும்பாலை.



விழித்து எழுந்தவுடன்
கிடைப்பதல்ல வெற்றி.
விழுந்து எழுந்தவுடன்
கிடைப்பதுதான் வெற்றி.

C.K.கற்பகஜோதி (X)
கரும்பாலை.



# மனதுக்குள்

எல்லோருக்கும் பூக்களைப் பிடிக்கும்
எனக்கு முள்ளைத்தான் பிடிக்கும்
செடிகளின் காவல் அதுதானென்று உணர்ந்திருப்பதால்

பலருக்கும் வெளிச்சம் பிடிக்கும்
எனக்கு இருளைத்தான் பிடிக்கும்
போலி முகங்களின் தரிசனம் மறைந்து போவதால்



நண்பர்களுக்கு பேசுவது பிடிக்கும்
எனக்கு மவுனம்தான் பிடிக்கும்
இதயங்கள் உரையாடும்போது நிகழ்வது அதுதான்.

சக மனிதர்க்கெல்லாம் வெற்றி பிடிக்கும்
எனக்கு தோல்விதான் பிடிக்கும்
எதிர்பார்ப்புகளை குறைத்துக்கொள்ள அது கற்றுத் தருவதனால்

என் சுற்றங்களுக்கெல்லாம் என்னை பிடிக்கும்
எனக்கோ Seed-ஐதான் பிடிக்கும்
என் ஒவ்வொரு முயற்சிக்கும் அது உறுதுணையாய் இருப்பதால்.

ராம்கிருஷ்ணன், P.T. காலனி.

கதை



# மீன் கதை

குட்டி மீன் : அம்மா எனக்குப் பசிக்கிறது. என்ன செய்வது?

தாய் மீன் : இதோ நான் சென்று உணவு கொண்டு வருகிறேன்

குட்டி மீன் : அதே ஒரு மனிதன் ரொட்டி தின்று கொண்டு இருக்கிறான்.

தாய் மீன் : எப்படி கரைக்குப் போவது?

(திடீரென புயல் வந்தது)

மனிதன் : என்ன! புயல் அடிக்கிறது. (மனிதன் கையில் இருந்த ரொட்டித்துண்டு கீழே விழுந்தது).

தாய் மீன் : இதோ! உணவு வந்துவிட்டது.

குட்டி மீன் : ஆஹா ரொட்டி மிகவும் அருமை.

தாய் மீன் : ஆனால் எனக்கு பசிக்கிறதே

(தாய்மீன் குட்டியை விரட்டியது)

குட்டி மீன் : அம்மா வேண்டாம்! என்னைத் தின்று விடாதீர்கள். (உடனே குட்டி மீன் சுறாமீனைப் பார்த்து விலகியது) (சுறா மீன் வாயை திறந்தது)

தாய் மீன் : வேண்டாம்! என்னை விழுங்கி விடாதே.

சுறா மீன் : மீன்! ஆ! சூப்பரா இருக்கிறது

நீதி : தாயை தன் குட்டியை தின்றால் அந்தத் தாய்க்கே இப்படித்தான் கதி.



முத்துலெட்சுமி (VI)
S.M. நகர்.

# சரித்திரம் படைப்போம்



சாதனை படைப்போம் வாடா - வா
பல தடைகள் உடைப்போம் வாடா வா

வேதனை வீட்டின் சோதனை கதவை
சாதனைக்காக திறப்போம் வாடா வா

காத்திருந்தால் கிடைக்காது - எதுவும்
முயன்று பார்த்தால் மறுக்காது
புயலுக்கும் வலிமை இருக்காது - அதுவும்
உன் முன்னே நிற்காது.



காலம் உன்னை வளைக்காது
வளைந்தால் அதுவும் நிலைக்காது.
கதிரும் உன்னை தீண்டாது
தீண்டும் வலிமை இருக்காது
வாழ்க்கையொரு போதி மரம்
முயன்று பார்த்தால் சேதி தரும்
ஒருமுறை இறந்தும் மறுமுறை பிறந்தும்
சரித்திரம் படைப்போம் வாடா வா...

(தழுவல் பாடல்)
விருமாண்டி VIII
தத்தனேரி.

# கண்ணீர்த் துளிகள்



## உலகமயம்

சிங்களத்துத் தேயிலை யோடு
சிந்துவெளி சர்க்கரை யோடு
வாஷிங்டன் பால்பவு டரோடு
வாய்மணக்கும் இந்திய டீ.



## தனியார்மயம்




வாங்கிய கடனைக்
கட்ட மறுப்பவனுக்கு
விற்கத் துடிக்கிறது அரசு
வங்கிகளை.

## இறக்குமதி

மானங் காக்க
ஆடை இல்லையே என்று
வருத்தப்படாதே சகோதரா
இதோ
இறக்குமதியாகப் போகிறதாம்
வெளிநாட்டில் இருந்து
கோவணம்!!!

## தண்ணீர்! தண்ணீர்!!



குடிநீர்க் கட்டுப்பாடு என்று
கூப்பாடு போடாதே
தாராளமாய்க் கிடைக்கிறது
கடைகளில்
பெப்சியும், கோக்கும்...

செ.படேல் (XI)
கரும்பாலை

(படித்து நினைவில் நின்றவை)

## Follow Me



*Follow me! Follow me!*
*I am going to a new place!*
*Follow me! Follow me!*
*I am going to a happy family!*
*If you come there you will get happy!*
*Don't Stop! Don't Stop!*
*That stopping will stop you!*
*Don't sleep! Don't sleep!*
*That sleeping will sleep you!*
*Follow me! Follow me!*
*I am going to a new world!*
*Follow me! Follow me!*
*I will introduce your relatives.*
*If you come there, you will win!*
*you will with the world!*

**R.Karthik**
**American College, Ist Year R.P.S.**
**Indra Nagar.**

## Spelling of Life




*LIFE is a compact disc*
*Loaded with lot of risks*
*Scratches accur*
*Also recovers !*
*The double helix,*
*That makes all trickts...*
*The Replica of Infants*
*Most of us really wants...*
*Evolve to Love Everybody,*
*Genesis of Love is during Mitosis*
*Where the Nascent sharing accurs...*
*Live to Love every moment and*
*Love to Live every moment....*

**S.Bharath M.Sc.,**
**Seed Volunteer**

## அகங்கள்



தலையணை
தலைக்கனமான நாட்களில்
இரவுகளை என்னால்
இரவல் வாங்க இயலவில்லை
ஆதலால் பகலோடு சேர்த்து
பல இரவுகளும் பல்லிளித்தன...



உணவுக்குழாய் சுவாசித்தது
சுவாசக்குழாய் உண்கிறது
உறுப்புகள் அனைத்தும் ஒன்றுகூடி
சதி செய்தது....

இத்துணை மாற்றங்கள் என்னில்
இவை என்னாலில்லை
Seed விதையின் முகங்களில் தெரிந்த
அகங்களால்....

செ.பரத் M.Sc.,
சீடு தொண்டர்.


## வெளிநாட்டு மோகம்

ஒரு தந்தையின் இறப்புச் செய்தி
ஈ-மெயிலில் வருகிறது
சாஃப்ட்வேர் சிலந்திவலைப் பின்னலுக்குள்
தகப்பன் நினைவுகளைத் தேடி எடுத்து
கொடுக்கப்பட்ட சிறு இடைவெளியில்
கொஞ்சமாய் அழுகிறான்.
உயிர் மீட்க உதவாத உனது
டாலர்களோடு நீ வந்து சேரும்போது
எரித்த சாம்பல் கூட மிஞ்சி இருக்காது
அதனாலென்ன நண்பனே
இறந்து போனவர்களுடன் தொடர்புகொள்ள
ஒரு வெப்சைட் வராமலா போய்விடும்!



படித்ததில் நினைவு நின்றவை
தொகுப்பு
M.S.தங்கலெட்சுமி, கரும்பாலை.

# மறதி ஏன்?



1. பதற்றம்
2. விருப்பம் இல்லாமல் வாசித்தல்
3. தேர்வை குறித்த பயம்
4. போதிய பயிற்சி இன்மை
5. திருப்தியற்ற படிப்பு முறை
6. புரிந்து கொள்ளாத தன்மை
7. குருட்டு மனப்பாடம்
8. கவனக்குறைவு
9. விழிப்புணர்வு இன்மை
10. இயந்திரத்தனமான தயாரிப்பு.




ஷமீலா பேகம்
சம்பக்குடி.

| மொழி | எழுத்துக்களின் எண்ணிக்கை |
|---|---|
| சீனா | 214 |
| பாரசீகம் | 31 |
| ஸ்பானிஷ் | 27 |
| அரபு | 28 |
| ஜெர்மன் | 26 |
| பிரான்ஸ் | 26 |
| துருக்கி | 26 |
| கிரேக்கம் | 24 |
| இலத்தீன் | 22 |
| தமிழ் | 247 |
| ஆங்கிலம் | 26 |
| இத்தாலி | 20 |




ஆபிதா பானு
சம்பக்குடி.

# கனவு



உன் வரவுக்காக
யுகம் யுகமாய்
காத்திருந்தேன்
லட்சோப லட்சம்
இடியும் மின்னலும்
என் வருகைக்காக
காத்திருந்தது என்று
எனக்கு தெரியாது.


இருட்டில் முரடாய்
குறட்டை விடும்
தவளையாய் நான்
நிலை தடுமாறிய
வேளையில்
கைகளில் சிக்கிய
புல்லை எடுத்து
பூமியில் நட்டு வைத்தேன்.



பூக்கள் ரகமாய்
ரகமாய் வண்ணக்
கோலமிட்டன.
பூக்களின் மத்தியில்
மகரந்தங்கள்...
இல்லை. அதன் பெயர் உணர்ந்து அறிந்தேன்
சீடு (விதை) என்று!!!

பாலமுருகன் M.A.
பாலமேடு.
சீடு தொண்டர்.

# குழந்தை



அது ஆண்டுதோறும் நடக்கும் பொருட்காட்சி. எள் எண்ணெய் ஆகுமளவுக்குப் பெருங்கூட்டம். விதவிதமான கடைகள், கண் கவரும் பொருட்கள், மூக்கைத் துளைக்கும் தின்பண்டங்கள்.

அவன் தன் ஐந்து வயது மகளின் கைவிரல் பிடித்து பொருட்காட்சியைச் சுற்றி வருகிறான். மகள் பொம்மை, சாக்லேட், பலூன், பந்து என பார்ப்பதையெல்லாம் கை நீட்டி கேட்கிறாள்.

கேட்கும்போதெல்லாம் சாக்குபோக்குச் சொல்லி நழுவுகிறான். தப்பிக்கிறான். குழந்தையின் பிடிவாதம் அதிகமாயிற்று. அழுகிறாள். அடம் பிடிக்கிறாள்.



கூட்ட நெரிசல், இமைக்கும் நேரத்தில் அவனும் குழந்தையும் பிரிகிறார்கள்.

குழந்தை இப்போது பொருட்காட்சி அலுவலக அறையில் காவலர் புடைசூழ விம்மி, விம்மி அழுகிறது. அழுகுரல் கூட்டத்தில் கரைகிறது. பலரும் பொம்மை, சாக்லேட், பலூன், பந்து என பலதைக் கொடுத்து அழுகையை நிறுத்த சமாதானப்படுத்தி பார்க்கிறார்கள்.

ம்ஹிம்... குழந்தை எல்லாவற்றையும் உதறுகிறது. எனக்கு அப்பா வேணும். அப்பா வேணும் என்கிறது குழந்தை.

B.சுரேஷ்குமார் இரண்டாமாண்டு
ஆங்கிலம் -அமெரிக்கன் கல்லூரி
கரும்பாலை.

---

M.P. : நான் இந்த வருடம் கால்வாயை திறப்பேன்.
பொதுசனம் : என்னது இந்த வருடம் கால் வாயை மட்டும் தான் திறப்பாரா?

S.B.சுல்தான் அலாவுதீன் XI
S.M.நகர்.



# கண்ணுக்குள் கதகளி!

பாடங்களைப் படிக்கும்போது நம் முன்னால் புத்தகம் விரிந்திருக்கும். பாடங்களின் மேல் நமது கண் பதிந்திருக்கும். ஆனால், பாடங்கள் நமது மனதில் பதியாது. காரணம், நமது கவனமின்மை. படிக்கும்போது நமது கவனச்சிதறல் காரணமாக, நமது மனம் வேறு திசைகளில் அலைபாய்கிறது.

படிப்பதில் முழுமையான கவனத்தைச் செலுத்தி நமது மனதை ஒருமுகப்படுத்த தியானம், யோகா உள்ளிட்ட பல முறைகள் உண்டு. சுறுசுறுப்பான நேரங்களில் படிக்கத் தொடங்குவது, சோர்வான நேரங்களில் இடைவெளிவிட்டுப் படிப்பது எனப் பல யோசனைகள் சொல்லப்படுவதுண்டு.

மனதை ஒருமுகப்படுத்த இங்கே கொடுக்கப்பட்டுள்ள பயிற்சிகள் மாணவர்களுக்கு உதவியாக இருக்கும்.

பாடங்களைப் படிக்கத் தொடங்குவதற்கு முன்னதாக அடுத்த பக்கத்தில் (படம்-1ல்) உள்ள கறுப்புக் கட்டத்தின் மையத்தில் உள்ள கறுப்புப் புள்ளியையே சிறிதுநேரம் உற்றுப் பாருங்கள். பின்பு, எதிர்ப் பக்கம் வெள்ளைக் கட்டத்தில் உள்ள கறுப்பு வட்டப் (படம்-2) புள்ளியைச் சிறிது நேரம் உற்றுப் பாருங்கள். என்ன அந்தக் கறுப்பு வட்ட புள்ளியைச் சுற்றி நிழல் போல் ஒரு சாம்பல் படலம் படிவது கண்ணுக்குத் தெரிகிறதா? அப்படியானால், உங்கள் கவனம் ஒருமுகப்படுகிறது என்று பொருள்.

அடுத்ததாக, படம் 3-ல் கறுப்பு வட்டப்புள்ளியில் பார்வையைப் பதித்து, கண்களை மெதுவாக கோட்டின் வழியே நகர்த்திக்கொண்டே வந்து, தொடங்கிய இடத்தில் முடிக்க வேண்டும். இப்படிச் சில முறை செய்ய வேண்டும். படம் 4-லும் இதே போலச் செய்ய வேண்டும். ஆனால், ஒரு சின்ன வித்தியாசம். பார்வையை நன்கு சின்ன வட்டங்களுக்குள் ஒரு சுற்று சுற்றவேண்டியிருக்கும்.


கடைசியாக, (படம் 5) ஒரு புறம் கறுப்பு வட்டமும் மறுபுறம் வெள்ளை வட்டமும் கொடுக்கப்பட்டுள்ளது. கறுப்பு வட்டத்திலிருந்து வெள்ளை வட்டத்துக்கு, வெள்ளை வட்டத்திலிருந்து கறுப்பு வட்டத்துக்கு என கோடுகளின் மீது கண்களை பலமுறை நகர்த்திச் செல்ல வேண்டும்.

படிக்கத் தொடங்கும்முன், சில நிமிடங்களை ஒதுக்கி இந்தப் பயிற்சிகளைச் செய்தால் போதும்... மனம் ஒருமைப்படும். மாணவர்களின் கவனத்தைக் கூர்மைப்படுத்த மிகவும் உதவியான பயிற்சிகள் இவை.


நன்றி: வெற்றிவிகடன்




படம் - 1




படம் - 2






படம் - 3






படம் - 4





நன்றி: வெற்றிவிகடன்



இங்கிருந்து
தொடங்குங்கள்



இங்கே
முடியுங்கள்!



வாண்டுகள் ஜான் கொண்டாட்டம் - கரும்பாலை - 14.11.2006

புகைப்படம்: கணேஷ்பாபு

## இப்போதே வாங்கி வெச்சுக்குங்க!

"சாதிகள் இல்லையடி பாப்பா" என்று பாரதி பாடி விட்டுப் போயிருந்தாலும், ப்ளஸ் டூ தேர்வு முடிந்த பிறகு கல்லூரிகளில் சேரும்போது கட்டாயம் சாதிச் சான்றிதழ் தேவை. குறிப்பாக, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடி இனத்தைச் சேர்ந்த மாணவர்கள் அனைவருக்கும் சாதிச் சான்றிதழ் அவசியம் தேவைப்படும். எனவே, அந்தச் சமயத்தில் அரசு அலுவலகங்களுக்கு அலைந்து கொண்டிருக்காமல், இப்போதே விண்ணப்பித்து சாதிச் சான்றிதழை வாங்கி வைத்துக்கொள்வது கடைசி நேர பரபரப்பைத் தவிர்க்க உதவும்.


சாதிச் சான்றிதழ் வாங்கும்போது அதில் உங்கள் பெயர் மற்றும் சாதி சரியாகக் குறிப்பிட்டிருக்கிறதா, சான்றிதழ் தரும் அதிகாரியில் கையெழுத்து மற்றும் அவரது பதவிக்கு உரிய முத்திரை ஆகியவை இடம் பெற்றிருக்கிறதா என்பதைச் சரிபார்த்துக்கொள்ளுங்கள்.

O.G.மோகன், R.A.பாஸ்கர்ராஜா




# படித்திடு... புசித்திடு!

படிப்பில் ஒன்றிவிடும் மாணவர்கள் பெரும்பாலும் நேரத்துக்குச் சாப்பிடுவதில்லை. இந்த ஒரு பாடத்தை மட்டும் முடித்துவிட்டுச் சாப்பிடுவோம் என சாப்பிடுவதைத் தள்ளிப் போட்டுக்கொண்டே இருப்பார்கள். இதனால், இரத்தத்தில் சர்க்கரையின் அளவு குறைய வாய்ப்புள்ளது. மூளையின் செயல்பாட்டு வேகமும் குறையும். இன்னொரு பக்கம், படிக்கும் மாணவர்களுக்குப் பொதுவாக பசிஉணர்வு இருக்காது. சரி, பசிக்கவில்லையே என்று சாப்பிடாமல், வெறும் வயிற்றோடு இருப்பது மனஅழுத்தத்தை அதிகமாக்கும். தேவையான அளவு சாப்பிட்டால்தான் உடலில் தெம்பு இருக்கும். மூளை செய்யும் வேலைக்கு சரியானபடி அதற்கு ஊட்டம் கொடுக்க வேண்டும். எனவே, நேரத்துக்குச் சாப்பிடுங்கள்.



# பகிர்ந்து உண்டால் பலே உற்சாகம்!




மூன்று வேளை, சாப்பாட்டில், ஒவ்வொரு வேளையும் ஃபுல் கட் பழக்கம் உள்ளவர்கள் நாம். வயிறு நிறையச் சாப்பிடுவது, உடனே தூக்கத்தையும் சோம்பலையும் வரவழைக்கும். இதனால் மற்ற நேரங்களில் பிரச்சனை இல்லை என்றாலும், தேர்வுக்குப் படிக்கும் மாணவர்களுக்கு உற்சாகத்தை குறைக்கும். எனவே, மூன்று வேளை சாப்பாடு என்பதைப் பிரித்துக் கொஞ்சம் கொஞ்சமாக 6 வேளை முதல் 8 வேளையாகப் பகிர்ந்து சாப்பிடலாம். இப்படிப் பிரித்து சாப்பிடும்போது சாதம் அல்லது இட்லி, தோசை போன்ற கார்போஹைட்ரேட் அதிகமுள்ள உணவுகள் அதிகமாகவும், பழ வகைகள், வெஜிடபிள் சாலட்ஸ் அதைவிடக் கொஞ்சம் குறைவாகவும், மோர், பால், இளநீர் போன்றவையும் இருக்கும்படி பார்த்துக்கொள்வது நல்லது. இது சீரான சத்து கிடைக்க வழிவகுக்கும்.



# நீரே சத்து!

உடம்பைத் தெம்பாகவும் சோம்பலின்றி உற்சாகமாகவும் வைக்கக்கூடிய உணவுப் பொருளைத்தான் சாப்பிட வேண்டும். முக்கியமாக காய்கறிகள், பழங்களை அதிகமாகச் சேர்த்துக்கொள்ளலாம். இட்லி, தோசை, இடியாப்பம் போன்ற எளிதாகச் செரிக்கக்கூடிய உணவுகள் பரீட்சை நேரத்துக்கு சிறந்தவை. இவற்றில் கார்போஹைட்ரேட் அளவு அதிகமாக இருக்கும். இவை படிக்கும் மாணவர்களுக்கு நல்லது. ஆப்பிள், மாதுளை, வாழைப்பழம் ஆகிய ஆரஞ்சுப் பழவகைகளும் நீர்ச்சத்து அதிகம் கொண்டவை. வெயில் காலங்களில் உடலிலிருந்து வியர்வை வழியாக அதிகம் நீர் வெளியேறும் என்பதால், பழங்கள் சாப்பிடுவது நீர்ச்சத்தைக் குறையாமல் பார்த்துக் கொள்ளும். அடிக்கடி தண்ணீர் குடிப்பதும் நல்லது.



தொகுப்பு
C.T.பிரேம்குமார்





வாண்டுகள் அரங்க குழந்தைகள் கலை நிகழ்வுகள் - 14.11.2006

படங்கள் K.L.கணேஷ்பாபு


# சீடு ஏழாமாண்டு நிறைவையொட்டி தலைவர்கள் விக்கி, அமுதா, வாசித்தளித்த சீடு ஆண்டறிக்கை - 2006

அனைவருக்கும் வணக்கங்களும், வாழ்த்துகளும், குழந்தைகள் மன்றம், தேடல் - இளைஞர்கள் மன்றம், Dr.ஆடம்ஸ் மற்றும் பொறுப்பாளர்கள் - அறங்காவலர்கள் சார்பாக அனைவரையும் வருக, வருக என வரவேற்கிறோம்.

திருமிகு. ஜார்ஜ் - பிரேமா மைக்கேல் வளாகத்தில் உங்களைச் சந்திப்பதிலும், எங்களின் 2006-ஆம் ஆண்டின் நடவடிக்கைகளைப் பகிர்ந்து கொள்ளும் வகையிலும் ஒரு வாய்ப்பு கிடைத்தமைக்காக பெரு மகிழ்ச்சி அடைகிறோம்.

எங்கள் மையத்தில் ஐந்தாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரையிலும், ஒன்பதாம் வகுப்பிலிருந்து பன்னிரெண்டாம் வகுப்பு வரையிலும், கல்லூரி மாணவர்கள் என மூன்று பிரிவினராய் இயங்குகிறோம். ஐந்தாம் வகுப்பிலிருந்து பன்னிரெண்டாம் வகுப்பு வரை குழந்தைகள் மாமன்றமாகவும், கல்லூரி மாணவர்கள் குழு தனிக்குழுவாகவும் செயல்படுகிறது. குழந்தைகள் மாமன்ற பிரதிநிதிகளாய் விக்கி மற்றும் அமுதா அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாய் செயலாற்றினர்.

மாலை 5.30 மணி முதல் 6.00 மணி வரையிலும் சனி, ஞாயிறு போன்ற விடுமுறை நாட்களில் குழந்தைகள் பல்வேறு துறைசார் விஷயங்களையும், பல்துறை அறிவினையும் பெருக்கிக் கொள்ள ஆர்வமாய் இயங்கிவருகின்றனர். காலாண்டு, அரையாண்டு, முழுஆண்டு அரசு விடுமுறை தினங்கள் ஆகிய தினங்களில் சீடு தொண்டர்கள் வருகை தந்து மகிழ்ந்தனர்.




2006-ஆம் ஆண்டு கரும்பாலை மாமன்ற பொறுப்பாளர்களாக விக்கி, அமுதா ஆகியோரும் தத்தனேரி மாணவர் பொறுப்பாளராக கமலம், சம்பக்குடி மாணவர் பொறுப்பாளராக முருகேஸ்வரியும் பொறுப்பேற்று சிறப்பாக செயல்பட்டனர். இளைஞர் மன்ற மாணவர் பொறுப்பாளராக தாமரையும், கலாவும் இருந்தனர்.

Seed என்னும் குடும்பத்தில் 150 மாணவர் குடும்பங்கள் இணைந்திருக்கின்றன. 250 குழந்தைகளும், இளைஞர்களும், கல்வியியல் பயன்களும், வாழ்வியல் வழிகாட்டல்களும் பெற மையத்திற்கு வருகின்றனர். 23 ஆசிரியத் தொண்டர்கள் தினசரி மாலை நேரங்களில் கணிதம்,அறிவியல், ஆங்கிலம் பாடங்களுக்கு பயிற்சி அளிக்கின்றனர்.

சிறுசேமிப்பு இயக்கமான தேன்கூடு நன்றாய் இயங்குகிறது. குழந்தைகளின் சேமிப்பின் மூலம் பணம் சேகரிக்கப்பட்டு சுய தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டன. அன்றாட மைய செலவுகள் தேன்கூடு பணத்தின் மூலம் தீர்க்கப்படுகின்றன.

இயற்கை அன்னையின் அரவணைப்பை போல, SEED எனும் அறிவு அரண்மனைக்கு வருகைதந்து பேராசிரியர் குமாரசாமி, வழக்கறிஞர் கார்த்திக் ராஜா, பேராசிரியர் அழகுராஜா, பேராசிரியர் சுகந்தா, ஆசிரியர்கள் சரவணக்குமார், மாயாண்டி, பன்னீர்செல்வம், கதிரேசன் போன்றோர்கள் மாணவர்களுக்கு அறிவொளியை புகுத்தினர்.



திருமிகு. ஜான் ஆபிரகாம், பிரேமா, மைக்கேல் அவர்கள் வருகைபுரிந்து, மாணவர்களின் இலட்சியங்களை கேட்டறிந்தனர். நூலக புத்தகங்களை மையத்திற்கு பரிசாக வழங்கினர். பேராசிரியர் குமாரசாமியின் தன்னம்பிக்கை வகுப்பு, வழக்கறிஞர் கார்த்திக்ராஜா சட்ட விழிப்புணர்வு, பேராசிரியர் சுகந்தா காந்திய தேவை, கார்த்திக் பாரதிஅண்ணன் இனிமை மிகுந்த பாடல்கள் திரு.ஜனார்த்தனன் உடற்பயிற்சி முறைகள், திரு.மதுரைவீரன் தியான நிலைகள் போன்ற தலைப்புகளில் மாணவர்களிடம் கலந்துரையாடி மகிழ்ந்தனர். மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.ஸ்ரீதேவி வருகை புரிந்து பொங்கல் ஆங்கில கதை தொகுப்பினை வெளியிட்டு SEEDக்கு பெருமை சேர்த்தார்.

பாரஸ்ட், ஜென்னி தம்பதியினரின் வருகை கோடை விடுமுறைக்கு சிறப்புச் சேர்த்தது. ஆடம்ஸ் சார் அண்ணன், அண்ணி போன்றோரோடு பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. KGZU, KYE ஆகிய ஆராய்ச்சி மாணவர்களின் வருகை, சுவிஸ் நண்பர்களின் வருகை, இசபெல்லா அவர்களின் வருகை, ஜோய் என்ற வெளிநாட்டு மாணவருக்கு தமிழ் பயிற்சியும் நிகழ்ந்தன. திரு.கார்த்திக்பாரதி முயற்சியில் ஆசிரியை மாரியம்மாளுக்கு பாராட்டு விழா, குறுந்தகடு வெளியீடு, வாழ்த்து மலர், நன்றி பேரணி என அமர்களமான விழா ஒன்று நடத்தப்பட்டது.

இவ்வாண்டு வெளிப்புற நடவடிக்கைகளுக்காக திருமோகூர், திருவாதவூர், அழகர்கோவில், சமணர் மலை, சாத்தையார் அணை, மீனாட்சி அம்மன் கோவில் போன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களுக்கு மாணவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். கேலக்ஸி உணவகத்தில் இரவு உணவு விருந்து, விடியலின் மாராத்தான் நிகழ்வு, கவிஞர் இரா.இரவியின் புத்தக வெளியீட்டு விழா, விடியல் ஒலி நாடா வெளியீட்டு விழா, தத்தனேரி பால் காய்ச்சு விழா, மனித உரிமை கருத்தரங்கு, அமெரிக்கன் கல்லூரி நாடக விழாக்கள், தலித் கலை விழா போன்ற நிகழ்வுகளுக்கு பார்வையாளராகவும்,விருந்தினராகவும் சீடு குழந்தைகள் சென்று வந்தனர்.

கார்த்திக் பாரதி அண்ணனால் கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தப்பட்ட அமைதி முகாமில் 4 சீடு மாணவர்கள் கலந்துகொண்டனர். சீடு தொண்டர்கள் பலரும் கருத்தாளர்களாக கலந்து கொண்டனர்.

மாணவர்கள் உற்சாகம் குன்றாமல் படிப்பில் அக்கறை காட்டிட உதவும் வகையில் பல்வேறு துறை சார்ந்த விளையாட்டுகள், போட்டிகள், விவாதங்கள், பட்டிமன்றங்கள், சீடு மையங்களில் நடத்தப் பெற்றன.

தேச உணர்வை பன்முகமாகவும், மதச்சார்பின்மை உணர்வினை புத்தாக்கம் பெறச் செய்யவும், சுதந்திர தினவிழா, ஆசிரியர் தினவிழா, தேசிய கருப்பொருள் அடங்கிய நாட்கள், தீபாவளி, இரம்ஜான், கிறிஸ்துமஸ், பொங்கல், கிருஷ்ணஜெயந்தி, விநாயகர் சதுர்த்தி, தமிழ் மற்றும் ஆங்கிலப் புத்தாண்டுகள் கொண்டாடப்பட்டன. இந்நாட்களில் பள்ளி, கல்லூரிகளின் ஆசிரிய, பேராசிரியைகள் சிறப்பு விருந்தினர்களாக வருகை தந்துச் சிறப்பித்தனர்.

நகர்புறங்களில் விளையாடவே இயலாத சில விளையாட்டுகள், கிராமப்புறங்களில் அழிந்து கொண்டிருக்கின்ற விளையாட்டுகளை தட்டி எடுத்து அதை மாணவர்கள் விளையாடி மகிழ்ந்தனர். கார்த்திக்பாரதி அண்ணனின் நாட்டார் விளையாட்டுப் போட்டிகள் 2006ஆம் ஆண்டுக்குரிய விளையாட்டு நாள் விழாவாக கொண்டாடப்பட்டன.

கோடை வானம் என்ற கற்றல் முகாம் கார்த்தி அண்ணனால் நடத்தப்பட்டது. கோடை விடுமுறை இம்முகாமின் மூலம் சிறப்பாக செலவானது. வேலாயுத நாடார் மகாலில் ஆடம்ஸ் அவர்களின் பிறந்தநாள் விழா நடைபெற்றது.

சீடுவின் உணவுத் திருவிழா மாணவர்களால் குறைந்த முதலோடு, பல்வகை உணவுகள் தயாரிக்கப்பட்டு அவற்றை விற்று இலாபம் ஈட்டப்பட்டது. அதன் லாபம் அன்பகம் இல்ல மனநல குழந்தைகளுக்கு விக்கி பொறுப்பில் செலவழிக்கப்பட்டது.

கார்த்திக் அகண்ணன் தயாரித்து இயக்கிய கனவு கிராமம் என்ற நாடகம் சிறப்பாக சம்பக்குடியில் அரங்கேற்றப்பட்டது.

மாரிச்செல்வன், அடைக்கன், வினோத் ஆகிய சிறப்பு தொண்டர்களுக்கு பணிப் பாராட்டு விழா நடைபெற்றது.



விடுமுறை நாட்களில் தட்டச்சு வகுப்பு, பாட்டு வகுப்பு, டேக் வாண்டோ வகுப்பு, விளையாட்டு வகுப்பு, ஓவிய வகுப்பு, பாடம் சாரா பிற துறை சார்ந்த வகுப்பு போன்ற வகுப்புகள் நடைபெற்றன. பைண்டிங் பட்டறை, பாட்டு டேக் வாண்டோ முகாம் போன்றவை இராதா கிருஷ்ணன் அண்ணனால் நடத்தப்பட்டது.

மதுரையில், கார்த்திக் அண்ணன் முயற்சியால் Dr.ஆடம்ஸ் நிதியில் நிறைய புத்தகங்கள் புத்தகக் கண்காட்சியில் வாங்கப்பட்டு, நூலகத்தில் நிரப்பப்பட்டன. தற்போது, 4000 புத்தகங்களும், 10 கணினிகளும்,

300 சீடிக்கள் விளையாட்டு உபகரணங்கள் போன்றவை மாணவர் பயன்பாட்டுக்கு வைக்கப்பட்டுள்ளன. மூன்று நாட்கள் கார்த்திக் அண்ணனோடு செவழித்து பெரும்பாலான குழந்தைகள் அற்புதமான 5 இதழ்களை தயாரித்து ஆண்டு விழாவில் வெளியிட்டனர்.

இவ்வாண்டு நிகழ்ச்சிகள் குழந்தைகள் பொறுப்பேற்று, தங்களை மெருகேற்றிக் கொள்ளவும், பள்ளிக் கல்வியோடு உணர்வு, அறிவு கலந்த சமூக அறிவு கல்வியாகவும் மலர்ந்தது. 2006 முடிவில் சீடு 7 வயது முடிந்து 8 வது வயதில் அடியெடுத்து வைக்கிறது.

உங்கள் அன்பிலும், அரவணைப்பிலும் வளர்ந்து வரும் நாங்கள் அன்பு, அறிவு, ஒழுக்கம், நேர்மை, பண்பு, துணிவு கொண்டவர்களாக சமூகத்திற்கும், குடும்பத்திற்கும் நற்பெயர் எடுத்துத் தருவோம் என உறுதி கூறி விடைபெறுகிறோம்.

நன்றி
வணக்கம்



இவண்
S.I.விக்கி, M.அமுதா
தயாரிப்பு A.S.கார்த்திக்பாரதி
S.I.படேல்
C.T.அருண்குமார்

SEED-ன் ஏழாமாண்டு நிறைவு விழா 30.1.2006 அன்று சத்திரப்பட்டி அருகே கல்லம்பட்டி பிரேமா மைக்கேல் வளாகத்தில் மிக கோலாகலமாய் கொண்டாடப்பட்டது. அழகர்கோவில் மலை சூழலில் அழகான ஷாமியானா பந்தலுடன் கூடிய பிரமாண்டமான அரங்க வடிவமைப்பில் 200 குழந்தைகளின் பங்கேற்புடன் நடந்த ஏழாமாண்டு நிறைவு அன்றைய நாளை மிகச்சிறப்பாக்கித் தந்தது.

விழாவில் விருந்தினர்களாக முன்னாள் LDC முதல்வர் Dr.பிரேமாமைக்கேல், ஷில்லாங் பல்கலைகழக துணைவேந்தர் (ஓய்வு) Dr.ஜார்ஜ் மைக்கேல் மற்றும் Seed நிர்வாக அறங்காவலர் திருமிகு. கார்த்திக்பாரதி, அறங்காவலர் அன்பரசன் மற்றும் பொறுப்பாளர்கள் மன்சூர், மீனாட்சி, ஷமிலாபேகம், ஆபிதாபானு, ஈஸ்வரி, மாரியம்மாள் போன்றோரும் பிற ஆசிரியத் தொண்டர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ஆசிரியர் குழு.



ஆசிரியர் குழு
C.T.அருண்குமார்
S.I.படேல்
C.T.பிரேம்குமார்
C.K.கற்பகஜோதி
M.S.தங்கலெட்சுமி

## பாராட்டுகின்றோம்

-இதழ் குழு



**C.T.அருண்குமார்**, S/o.R.சந்திரன் - C.தமிழ்ச்செல்வி
கிழக்குத்தெரு, கரும்பாலை, மதுரை-20.

கல்வி நிலை : XI Std. தியாகராயர் நன்முறை மேனிலைப்பள்ளி

2004 – விடியல் நிறுவனத்தில் அறிவியல் சொற்பொழிவாற்றியவர்
2004-05 – மாயச்சட்டை குழந்தைகள் நாடக 20 அரங்கேற்றங்களில் நடித்துள்ளவர்
2005 – ஆங்கில கதைப்போட்டியில் வென்று விமானத்தில் பறந்தவர்
2003 – சீடு சிறந்த மாணவர் விருது, புத்தக வாசிப்புக்கான விருது, அறிவியல் விருது
2004 – சீடு உயிரியல் விருது
2006 – பத்தாம் வகுப்பு பள்ளியில் இரண்டாம் மதிப்பெண்
செண்பகம் - முருகன் அறக்கட்டளை பரிசு.



**S.K.சரவணக்குமார்**, S/o.சுப்ரமணி - கிருஷ்ணலீலா
கிழக்குத்தெரு, கரும்பாலை, மதுரை-20.

கல்வி நிலை : அமெரிக்கன் கல்லூரி B.A., பொருளியல் மூன்றாமாண்டு

புகைப்பட கலைஞர், வாண்டுகள் கொண்டாட்டம், ஆனந்தம், நாடகம்,
விளையாட்டு, தந்தையர் போன்ற குழுக்களுக்கு மாணவர் தலைவர்
நடிப்பு, ஓவியம், பாடல், ஆடல் கலைகளால் வல்லவர்.
சீடு விளையாட்டு விருது (2004), MKU NSS விருது (2006)
அமெரிக்கன் கல்லூரி NSS மாணவர் தலைவர் (2005-07)
(கரும்பாலை, S.M.நகர், இந்திராநகர், P.T.காலனி, பகுதிகளில்
நாட்டுத் தொண்டு MKU விருது பெறும் மூன்றாம் மாணவர் சரவணகுமார்.
சுனாமி நிவாரண பணிகளில் பங்கேற்றவர்
குடியரசு தினவிழா அணிவகுப்பு முன் தயாரிப்பு முகாமில் பங்கேற்றவர்.



**B.A.செந்தில்குமார்**, S/o.A.போஸ் - அமராவதி
P.T.காலனி, மதுரை-20.


கல்விநிலை : அமெரிக்கன் கல்லூரி 3-ஆம் ஆண்டு பொருளாதார துறை மாணவர்

சிறந்த நடகள வீரர் – 2006ஆம் ஆண்டு கல்லூரி சாம்பியன் பட்டம் பெற்றவர்.
கல்லூரி NCC அணியின் மாணவர் தலைவர். தல்சைனிக் அகில இந்திய முகாம்.
குஜராத் ஒருமைப்பாட்டு முகாம். மதுரை காமராஜ் பல்கலைகழக தடைதாண்டும்
நடகள வெள்ளி பதக்க வீரர்.

மேற்கண்ட பகுதி Seed Trust பணி செய்யும் பகுதிகளில் வகுப்பு 1 முதல் கல்லூரி மூன்றாமாண்டு பயிலும் மாணவர்களின் புகழ் பேசுகின்ற பகுதியாக மாதந்தோறும் பிரசுரமாகும்.

ஆசிரியர் குழு

## 12-ஆம் வகுப்பு படிக்கும் [2006-07] இன்ஜினியரிங் கனவினை நனவாக்க விரும்பும் அறிவியல் - கணிதவியல் மாணவர்களுக்காக...



+2 மாணவர்களே

எளிய உழைக்கும் குடும்பத்தில் பிறந்து, இளங்கோ மாநகராட்சி பள்ளிக் கூடத்தில் படித்து,பொறியியல் கல்லூரியில் முயன்று இடம் பிடித்து சோதனைகளை சாதனைகளாக்கி, தனது குடும்பத்தினரின் ஆதரவோடு வெற்றிகளைத் தொட்ட பொறியியல் வல்லுநர் சீடின் நண்பர் சீடு அறக்கட்டளையைத் தொடர்பு கொண்டு பின்வரும் இனிய செய்தியை நமக்கு தெரிவித்துள்ளார்.

செய்தி வருமாறு

2006-2007 கல்வியாண்டில் 12-ஆம் வகுப்பில் இயற்பியல், வேதியியல், கணித பாடங்களையோ, பொறியியல் பட்டத்துக்குரிய பாடங்களையோ தமிழ் வழியில் எடுத்து, அதிக மதிப்பெண்கள் பெற்று அரசு பொறியியல் கல்லூரிகளில் இடம் பெறும் ஐந்து மாணவர்களுக்குரிய கல்விக் கட்டணங்களை பரிசாய் பட்டப்படிப்பு முடியும் வரை வழங்குவதாக, மும்பையில் பணிபுரியும் சீடு அறக்கட்டளை ஆதரவாளர் தெரிவித்துள்ளார். +2 திறமைசாலிகளே சிறப்பாய் தேர்வை எழுதுங்கள்.

"வெற்றிகளை சரித்திரமாக்குங்கள்" வாழ்த்துக்கள்!

முன்னுரிமை: கரும்பாலை, S.M.நகர், P.T.காலனி, இந்திராநகர், மானகிரி, தத்தனேரி மற்றும் சம்பக்குடி ஆகிய பகுதிகளை வாழ்விடமாக கொண்ட மாணவர்களுக்கு

சீடு நற்பணிகளில்<br>
A.S.கார்த்திக்பாரதி,<br>
K.P.அன்பரசன்



# பன்னிரெண்டாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு மாணவரா நீங்கள்.

***நம்பிக்கை நட்சத்திரங்களே!***

சீடு அறக்கட்டளை சமூகத்தாலும், பொருளாதார அமைப்பாலும் நலிவுற்று கிடக்கும் மக்களை நோக்கி தன்னால் இயன்றவரை நற்பணிகள் செய்து வருகிறது. கல்வி பெறுதல் ஒன்றே சமூக, பொருளாதார கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி என்பதை உணர்ந்து நலிவுற்ற மக்களின் குழந்தைகள், இளைஞர்கள் நலன் மேம்பாட்டுக்காக கல்வியைக் கருவியாகக் கொண்டு சீடு திட்டங்கள் தீட்டி அதன்வழி செயல்பட்டு வருகிறது. மதுரையில் கரும்பாலை, S.M.நகர், P.T.காலனி, இந்திராநகர், மானகிரி, தத்தனேரி, சம்பக்குடி பகுதிகளை தனது பணிக்குரிய இடங்களாக முதற்கட்டமாக சீடு தேர்வு செய்துள்ளது. இப்பகுதிகளில் உரிய மாணவர்களை ஊக்குவிக்கும் விதமாக 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் மேற்கண்ட ஏழு பகுதிகளிலே அதிக மதிப்பெண் பெற்று

முதலிடம் பெறுபவருக்கு ரூ. 5,000
இரண்டாமிடம் பெறுபவருக்கு ரூ. 4,000
மூன்றாமிடம் பெறுபவருக்கு ரூ. 3,000 என வழங்கப்படும்.

SEED தேர்வு செய்த பகுதிகளில் 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று

முதலிடம் பெறுபவருக்கு ரூ. 3,000
இரண்டாமிடம் பெறுபவருக்கு ரூ. 2,000
மூன்றாமிடம் பெறுபவருக்கு ரூ. 1,000 என வழங்கப்படும்


பரிசு வழங்குதல் Seed அறக்கட்டளை நிர்வாகத்தின் நிபந்தனைகளுக்குட்பட்டது.

கடினமாய் உழைப்பீர்! வெற்றிகளை குவிப்பீர்! வாழ்த்துக்கள்.

சீடு நற்பணிகளில் A.S.கார்த்திக்பாரதி, K.P.அன்பரசன்

* மாணவர் நலன், மேம்பாடு விரும்பும் கொடை உள்ளம் கொண்டவர்கள் 9894805446 என்ற தொலைபேசி எண்ணையோ அல்லது 0452-6456503 என்ற சீடு அலுவலக எண்ணையோ தொடர்பு கொள்ளவும்.

# குழந்தைகளே, இளைஞர்களே




உங்களின் படைப்புக்களை
கதை, கட்டுரை,
கவிதை, பாடல்கள்
நகைச்சுவைத் தோரணங்கள்,
துணுக்குச் செய்திகள்
என உங்கள் விருப்பப்படி அனுப்புங்கள்.
பிரசுரிக்க தகுதியுள்ளதை எங்கள் இதழ்க்குழு
தேர்வு செய்து பிரசுரிக்கும். நன்றி.
நண்பர்களே, காத்திருக்கின்றோம்.
தங்களின் படைப்புகளைப் பெறுவதற்கு.

நன்றி நண்பர்களே! அடுத்த இதழில் சந்திப்போம்.

முகவரி

SEED புதுயுகம் இதழ்
C/o. C.T.பிரேம்குமார்
439/1, அர்ஜுன் சண்முகா இல்லம்,
கிழக்குத் தெரு, கரும்பாலை, மதுரை-20.

இப்படிக்கு
C.T.பிரேம்குமார்
S.I.படேல்
C.T.அருண்குமார்
C.K.கற்பகஜோதி
M.S.தங்கலெட்சுமி

பிரசுரங்கள் கீழ்க்கண்ட பிரிவுகளில் பிரசுரிக்கப்படும்.

**வாண்டுகள் :-** முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை
(வயது 5 முதல் 10 வரை)

**கனவுகள் :-** 6-ம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை
(வயது 11 முதல் 17 வரை)

**தேடல் :-** கல்லூரி மாணவர்கள் மற்றும் பிற இளைஞர்கள்
(வயது 18 முதல் 35 வரை)

பிரசுரித்தல் முடிவு ஆசிரியர் குழுவின் முழு அதிகாரத்திற்குட்பட்டது.

**SEED**

# வாண்டுகள் அரங்கம்

## இனிய குழந்தைகள் உலகம் படைப்பதற்கான முயற்சி



5 வயது முதல் 10 வயது குழந்தைகளுக்காக மாலை மற்றும் விடுமுறை காலங்களை பயனுள்ள முறையில் செலவழிப்பதற்கு சீடு அறக்கட்டளையின் முயற்சியில் உருவாக்கப்பட்டுள்ள திட்டத்தின் பெயரே வாண்டுகள் அரங்கம். ஆடல், பாடல், விளையாட்டு என குழந்தைகள் விரும்பும் சூழலோடு, கற்றலை இனிமையாக்க, 5 தொண்டர்களோடு 369, கிழக்குத்தெரு, கரும்பாலை என்ற முகவரியில் வாண்டுகள் அரங்கம் செயல்பட்டு வருகிறது.

வருக பயன் பெறுக.

தொடர்புக்கு. M.சுந்தர்ராஜன்
திட்ட ஒருங்கிணைப்பாளர்
SEED வாண்டுகள் அரங்கம்,
9894320465